**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**
**C.C.No.814/2023**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பிலோமினுள் | **Caste** | : |
| **Husband's Name** | : செபஸ்தியான் | **Calling** | : வீட்டுக்குடித்தனம் |
| **Village** | : மைசூர் | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 72 |
| | | **Dated** | : 10.03.2025 |

**10.03.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 **திருமதி.பிலோமினாள்.** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.
1,5,8 **எதிரிகள் ஆஜர். 4 ம் எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கர்நாடகா மாநிலம் மைசூரில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 1978ம் வருடம் நானும் எனது கணவரும் குவைத் நாட்டில் பாதுகாப்புத் துறையில் பணிபுரிந்து வந்தோம். அந்த சமயத்தில் சர்வே எண். 1452/2 கொடைக்கானல் வில்பட்டியில் 3.26 ஏக்கர் நிலத்தை அப்துல் ரகீம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று கொடைக்கானல் சார்பதிவாளர் அலுவலகத்தில் முறையாக எனது கணவர் பெயரில் பதிவு செய்யப்பட்டது. அதனை நாங்கள் அனுபவித்து வந்தபோது 1993ம் வருடம் குணசேகரன் என்பவருக்கு பதிவு இல்லாத ஒத்திக்கு கொடுத்திருந்தோம். அந்த நிலத்தை குணசேகரன் பராமரித்து வந்தார். 1995ம் வருடம் ஆபிரகாம் மகன் சுந்தரம் அவரது குழந்தைகள் போலியாக ஆவணங்கள் உற்பத்தி செய்து நாங்கள் குவைத் நாட்டில் இருந்தபோது கொடைக்கானல் நீதிமன்றத்தில் O.S No. 47/1994 என்று வழக்கு பதிவு செய்து எங்களுக்குத் தெரியாமல் கோர்ட்டை

ஏமாற்றி அவர்கள் சார்பாக உத்தரவு பெற்றுள்ளார்கள். நாங்கள் ஒருமாதம் விடுமுறை சமயத்தில் கொடைக்கானல் வந்தபோது எங்களது நிலத்தை மரியராஜ், ஆபிரகாம் மகன் சுந்தரம் வாரிசுகள் ஆக்கிரமிப்பு செய்து, போலியான பவர் ஆப் அட்டார்ணி ஏற்படுத்தி மாறுதல் செய்த விபரம் தெரியவந்தது. மரியராஜ் அவரது மனைவி பெயருக்கு மாறுதல் செய்திருந்தது தெரியவந்தது. 2006 ம் வருடம் எனது கணவர் எனது பெயருக்கு கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்தார். எனது மீது மரியராஜ்ம், பியூலாமேரி ஆகியோர்கள் கொடைக்கானல் நீதிமன்றத்தில் எங்களுக்கு எதிராக O.S. No. 161/2014 வழக்காக தாக்கல் செய்தார்கள். அதனால் நாங்கள் விஜிலன்ஸ் மற்றும் நில அபகரிப்பு பிரிவில் புகார் செய்தோம். கொடைக்கானல் நீதிமன்றத்தில் நடந்த O.S. 161/2014 வழக்கில் நாங்கள் குவைத் நாட்டில் இருந்தபோது எங்களுக்கு சம்மன் சார்பு செய்யப்பட்டதாக போலியாக கையொப்பம் உற்பத்தி செய்யப்பட்டு, நீதிமன்றத்தை ஏமாற்றி அவர்களுக்கு சாதகமாக Exparte தீர்ப்பு பெற்ற விபரம் தெரிந்தது. அதனால் 2015 ம் வருடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u> இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.03.18 12:28:49 +0530

Judicial Magistrate No.II(FAC)
Dindigul.